
வெளியீடு எண் 377

# திருக்கருப்பறியலூர்த் தல வரலாறு

176

176 / 1-57

REGISTRAR OF ... 17 JAN 1957 MADRAS




விமானங்கள்

31.

O23'.28.2193
N56.
113195

1956

[தருமபுர ஆதீனம்



தருமபுர ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 377

உ

சிவமயம்

# திருக்கருப்பறியலூர்த் தல வரலாறு

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25 ஆவது குருமகாசந்நிதானம்


ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

திருக்கருப்பறியலூர்

ஸ்ரீ குற்றம்பொறுத்தநாத சுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது



1956

ஞானசம்பந்தம் அச்சகம்,

தருமபுரம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
113195

குருபாதம்

# நான்முகம்

தெய்வம் கலந்த தீந்தமிழ் கவிவளம் உடையது; புவி வளமும் உடையது. புவிவளமோ புண்ணிய வளம்; திருவருள் வளம். தமிழகம் நல்ல திருவருளாளர்களை நாளும் கண்டு வருவது. 'உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதும், உத்தமர்கள் வாழ்வு இந்நாட்டுக்கு என்றும் பேறற்கரிய பேருக அமைந் திருக்கிறது. 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்ற பழந்தமிழ்ப் பாடலும் இதனையே வற்புறுத்துதலை யாவரும் அறிவர். சமயாசாரியப் பெருமக் கள் வாழ்ந்ததனுல் பெருகி வாழ்ந்த தலங்களைப் போலவே, பாடல் பெற்றதனுலும் பெருகி வாழ்ந்த தலங்கள் பலப்பல. அவற்றுள் ஒன்று தலைஞாயிறு. கருப்பறியலூர் என்பது தேவாரத் திருப்பெயர். தல வரலாறுகளை நல்ல இலக்கிய மாக அச்சிட்டு வெளியிட்டருளும் தருமையாதீனத்து 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இத்தல வரலாற்றினையும் வெளியிடத் திருவுளம் பற்றி னர்கள்.


ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன் அவர்களை இப்பணியில் ஈடுபடுத்தியருளினர்கள்.

நூல் ஸ்ரீ குற்றம்பொறுத்தநாதரின் திருவருள் துணை யால் வெளிவருகிறது. உலகம் பெற்றுப் பயனெய்துமாக.


குருபாதம்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | இடம் | ... | 5 |
| 2. | கருவைப் பறிக்கும் திருத்தலம் | ... | 6 |
| 3. | அந்தணர் வழிபட்ட அருந்தலம் | ... | ,, |
| 4. | எல்லைகள் | ... | 7 |
| 5. | பெயர்களும் காரணங்களும் | ... | ,, |
| 6. | பெருமை | ... | 8 |
| 7. | தீர்த்தம் | ... | ,, |
| 8. | இரத்தினகிரி என்ற பெயர் வரலாறு | ... | 9 |
| 9. | புராண வரலாறுகள் : | ... | 10 |
| | (1) முனிவரர் வழிபடுதல் | | |
| | (2) இராவணன் வழிபடுதல் | | |
| | (3) அநுமன் வழிபடுதல் | | |
| | (4) விசித்திராங்கன் வழிபடுதல் | | |
| 10. | மூர்த்திகள் | ... | 16 |
| 11. | இலக்கியம் | ... | 17 |
| 12. | நிர்வாகம் | ... | 18 |
| 13. | திருப்பணி | ... | 19 |
| 14. | கல்வெட்டுக்களும் செய்திகளும் | ... | ,, |
| 15. | கோயில் அமைப்புக்களும் மன்னர்களும் | ... | 21 |
| 16. | நின்று நிலவும் நீள்தலம் | ... | ,, |
| 17. | திருப்பதிகங்களும் குறிப்புரையும் : | | |
| | (1) திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம் | ... | 23 |
| | (2) சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் | ... | 28 |



சுவாமி விமானமும் மலைக்கோவிலும்



மலைக்கோவில்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# திருக்கருப்பறியலூர்த் தல வரலாறு

## 1. இடம்

சோழவளநாடு நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் சிறப்புற்ற திருநாடு. புனல்நாடு, நீர்நாடு என்ற திருப்பெயர்களைத் தாங்கி மிளிரும் நன்னாடு. 'சேவிலித் தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி' யாம் காவிரி இதிற் பாய்ந்து வளப்படுத்துகிறது. இந்நாட்டில் 'ஒரு பெண் யானை படுக்கும் சிறிய இடம் ஏழு யானைகளுக்கு உணவளித்துக் காப்பாற்றும் நெல்வளம் சான்றது' என்பர் நம் முன்னோர். இதன்கண் அமைந்த சிவபிரான் திருக்கோயில்கள் பலவற்றுள்ளும் இப்போது தலைஞாயிறு என வழங்கும் இக்கருப்பறியலூர் சிறப்புற்றதாகும். கருப்பறியலூர் என்பது ஊரின்பெயர்; கோகுடிக்கோயில் என்பது கோயிற்பெயர். மதுரை - ஆலவாய், வெண்ணெய்நல்லூர் - அருட்டுறை போல அமைந்தது இப்பெயர் அமைப்பு. திருத்தருமையாதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ வைத்யநாதசுவாமி தேவஸ்தானம் அமைந்த வைத்தீச்சுரன் கோவிலின் மேற்கே நான்கு கல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. மாயூரம் - மணல்

மேடு கற்சாலேயில் அமைந்துள்ள பட்டவிருத்தி என்ற சிற்றூரிலிருந்து வடகிழக்குத் திக்கில் ஒரு கல்லில் இருக்கின்றது. உந்து (Bus) வழியாக இத்தலத்தை அடையலாம்.

## 2. கருவைப் பறிக்கும் திருத்தலம்

கருப்பறியலூர் என்ற இத்தலத் திருப்பெயரைத் திருஞானசம்பந்தப் பெருமானும், சுந்தரமூர்த்திப் பெருமானும் அருளியுள்ளனர். திருஞானசம்பந்த மூர்த்திகள் இப் பெயர்க் காரணத்தைத் தம்முடைய பதிகத்தின் தொடக்கத்திலேயே அருளினர். ‘துணேயும் சுற்றமும் பற்றும் ஆகியவற்றை அறுத்து வானுலக மளிப்பான்’ இத்தலத்துப் பெருமான் என்று அருளுகின்றது முதல் திருப்பாடல்; இவ்வண்ணம் கருமூலத்தைப் பறிப்பதனுலேயே ‘கருப் பறியல் ஊர்’ என்று பெயர் அமைந்தது; இவ்வண்ணம் முதற் பாடலில் மொழிந்தருளியவாறே இத்திருப்பதிக இறுதியிலும் ‘கலந்தவர் கருப்பறியல் மேய கடவுள்’ என்று அருளுவதும் இதற்கு உற்ற சான்ருக அமைகின்றது. இத் தலத்துக்குப் புராணம் பாடிய மருதூர் அம்பலவாணரும் இக்கருத்தினே நன்கு விளக்கிச் செல்கின்ருர்; ‘உள் ளிருக்கும் ஞானம் ஈதலிற் கருப்பறியலூர் எனலாம்’ என்பது அவர் வாக்கு. கருமூலத்தைப் பறித்துவிட்டுப் பரஞானத்தைப் பெருக்குகின்ற பழம்பதி இது என்பது அப்பாவலர் கருத்தாகும்.

## 3. அந்தணர் வழிபட்ட அருந்தலம்

தலேஞாயிறு என்ற பெயர் இத்தலத்துக்கு அமைந்த சிறப்பு சூரியனுல் அருச்சிக்கப் பெற்ற பாங்கினுல்

அமைந்தது. 'அருக்கன் அர்ச்சனை செய்தலால் ஆதித்தபுரி' என்பது புராணம். இவ்வூர்க்கமைந்த இந்தக் குறிப்பு தேவாரப் பதிகங்களில் குறிப்பிடப் பெறவில்லை. ஆயினும் அந்தணர்கள் மேவியிருக்கின்ற கருப்பறியலூர் என்று அருளுகின்றது தேவாரம்; 'வேதமோடு வேதியர்கள் வேள்விமுதலாகப், போதினோடு போதுமலர் கொண்டு புனைகின்ற' என்ற தொடராலும், 'முட்டாமே நாள் தோறும் நீர்மூழ்கிப் பூப்பறித்து மூன்றுபோதும், கட்டார்ந்த இண்டை கொண்டு அடிசேர்த்தும் அந்தணர்தம் கருப் பறியலூர்' என்ற தொடராலும், 'மறைவளர்க்கும் அந்தணர் தம் கருப்பறியலூர்' என்ற வாசகத்தாலும், அந்தணர்கள் பெருகியிருந்த திருத்தலம் இது என்பதனை நாம் தெள்ளிதின் உணரலாகும். இன்னும் 'சோதி ஒளி நற்புகை வளர்க்குவடுபுக்கு' என்ற சம்பந்தப் பெருமான் திருவாக்கு இத்தலத்துக் கோயில் கட்டுமலைமேல் அமைந்திருக்கும் செய்தியைக் குறிப்பதாகும். கல்வெட்டுக்களும் இவற் றுக்குத் துணைபுரிகின்ற செய்தி குறிப்பிடத்தகுந்ததாகும்.

## 4. எல்லைகள்

காவிரியின் வடக்கே. விநாயகநதிக்குத் தெற்கே, திருவாழ்கொளிபுத்தூர்க்குக் கிழக்கே, சீகாழிக்கு மேற்கே இத்தலம் விளங்குகிறது.

## 5. பெயர்களும் காரணங்களும்

முல்லை தலவிருட்சமாதலின் யூதிகாவனம்; பிறவிக்கு ஏதுவாகிய கன்மம் கெடுதலால் கன்மநாசபுரம்; சூரியன் வழிபட்டதால் ஆதித்தபுரி - தலைஞாயிறு; பரஞானத்தை

அருளிப் பிறவிவேரை அறுப்பதால் திருக்கருப்பறியலூர்; இரத்தினகிரியில் சட்டைநாதர் வீற்றிருப்பதாலும் சீகாழிக்கு மேற்கே இருப்பதாலும் மேலைக்காழி ஆகிய பல பேயர்களைப் பேறும்.

## 6. பெருமை

இத் தலத்தில் எந்த அறம் செய்யினும் ஒன்றுக்குப் பத்தாகப் பேருகிப் பயனளிக்கும். பிரமன் இத்தல மகிமையை வசிட்டருக்குச் சொல்ல, வசிட்டர் இங்குவந்து இலிங்கமமைத்து வழிபட்டு உணர்வரிய மேய்ஞ்ஞானம் பேற்றனர்.

## 7. தீர்த்தம்

இத்தலத்தில் விநாயக தீர்த்தம், சூரிய தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், அநுமதீர்த்தம், நிம்பபுட்கரணி, சங்கபுட்கரணி, பொற்றாமரை, சேங்கழுநீர்த்தடாகம் என எட்டுத் தீர்த்தங்கள் உள்ளன.

விநாயக தீர்த்தம்: சூரபன்மனுக்குப் பயந்து இந்திரன் சீகாழிக்கு வந்து நந்தவனமமைத்துத் தான் மூங்கிலாக மறைந்து நின்று இறைவனை வழிபட்டு வந்தான். இது கண்ட சூரபன்மன் சீகாழியின் சேழிப்பைக் கண்டு இங்கு தான் இந்திரன் பதுங்கியிருக்கவேண்டும் என்று கருதி மழை பேய்யாவாறு மேகங்களைத் தடுத்தான். நந்தவனம் வாடியது. இந்திரன் வருந்தி விநாயகனை வழிபட்டான்; தன் வருத்தத்தை விண்ணப்பித்துக்கோண்டான். சேவி ஏற்ற விநாயகப் பேருமானும் இந்திரனுடன் குடகுமலை சேன்று பிரமசாரி வடிவங்கோண்டு நின்றார். அப்போழுது

அங்கு வந்த அகத்தியர் கைக் கமண்டலத்தை அப்பிரமசாரி யிடம் கொடுத்தார்; இதைக் கையிலேயே வைத்திரு என்று சொல்லிச் சென்ருர். சென்றதும் அப்பிரமசாரி மூன்றுதரம் முனிவரைக் கூப்பிட்டும் அவர் வராமையால் கீழே வைத்தனர். அருகிருந்த இந்திரன் காகவடிவு கொண்டு அதனைக் கவிழ்த்தான். கவிழ்ந்த தீர்த்தம் ஆருகப்பெருகி ஓடிவந்தது. நந்தவனமும் நீர்பெற்றுத் தளிர்த்தது. விநாயகப் பெருமான் உதவியால் வந்தமையால் விநாயக நதி எனப் பெயர்பெற்றது.

இந்நதியில் தோய்வார்க்குத் தோன்னூல் ஞானம் தோன்றும்; துயரம் தோன்ருது. இன்பம் எய்தும்; எல்லா நன்மைகளும் உண்டாகும்.

சூரிய தீர்த்தம்: தக்கன் யாகத்திற்குச் சென்ற தீமையால் பல் இழந்த சூரியன் ஒளிகுன்றினுன். அதனுல் அவனியில் அவரவர்களும் தத்தம் கடமைகளையும் ஒழுக்கத் தையும் மறந்தனர். உலகமே இருண்டது. எல்லோரும் சூரியனிடம் முறையிட்டனர். சூரியன் எப்படியோ இந் நோய் எனக்கு வந்துவிட்டது என வருந்தினுன். தேவர்கள் "சிவநிந்தகன் செய்த யாகத்தில் சேர்ந்தமையால் உனக்கு வந்தகதி இது; நீ திருக்கருப்பறியலூர் சென்று குற்றம் பொறுத்தநாதரை வணங்கி அவர்முன் தீர்த்தமுண்டாக்கி விதிப்படி முழ்கி அருச்சித்தால் நோய் நீங்கும்" என்றனர். சூரியனும் அவ்வாறே செய்து அருள்பெற்ருன். இத் தீர்த்தத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடுவது மிகச் சிறந்தது.

## 8. இரத்தினகிரி என்ற பெயர் வரலாறு

முன்னுெரு காலத்தில் மேருமலையில் தேவர்க ளெல்லாரும் கூடியிருந்தார்கள். ஆதிசேடன் அங்கு

வந்தான். தேவர்கள் 'மலை கடல் காடு வளநகர் வான் எல்லாவற்றையும் திருமுடியில் தரிக்கும் சேடனே வருக!' என்று வரவேற்றனர். இதுகண்டு மனம் கோதித்த வாயு பகவான் 'காதும் காலும் இல்லாத இவனையா இப்படித் துதிப்பது? இருநாக்குப் படைத்த இவனுக்கா இவ்வளவு ஏற்றம்; நஞ்சுடையவனுக்கா நல்வரவேற்பு; கோணல் நடையுடையவனுக்கா இவ்வளவு குதூகலம், என்று பரிகசித்தான். இருவருக்கும் பகைமை மிகுந்தது. சேடன் தன் படங்களால் மலைச்சிகரங்களை மூடிக்கொண்டு 'வலிமையிருந்தால் அசைத்துப்பார்' என்றான்.

வாயுவும் பெரும் புயலாக மாறிப் பூசலிட்டான். கடல் வறண்டது. மலைகள் தூசியாயின. உலகம் அழிந்தது. இதனைக்கண்ட இந்திரன் முதலிய தேவர்கள் வேண்டியபடி ஆதிசேடன் தன் படங்களை மலைச்சிகரத்தைக் காணுமாறு திறந்தான். வாயு வேகமாகச் சிகரங்களைப் பிய்த்தெறிந்தான். அவற்றுள் ஒன்று இந்த இரத்தினகிரியாகிய மலை. இதில் இறைவன் நல்லோரைக் காத்து அல்லாதவரைத் திருத்தி எழுந்தருளியிருக்கின்றார். இவரைக்காலையிலும் மாலையிலும் வணங்குவார்க்குப் பேரின்பம் சித்திக்கும்.

## 9. புராண வரலாறுகள்

### 1. முனிவரர் வழிபடுதல்

கயிலைமலைச் சாரலிலே ஒரு அழகிய வனம் உண்டு. அதில் யாரேனும் அணுவளவு தவஞ்செய்வாராயினும் மேரு மலையைப்போல வளர்ந்து பயன் தரும். அத்தடாகத்தின் கரையில் அங்கிரஸ், கௌதமர், வாமதேவர், கபாலி முதலான எழுபத்திரண்டு முனிவர்கள் செய்தற்கரிய பெருந்

தவத்தைச் செய்தார்கள். இறைவன் எழுந்தருளி வந்து 'உங்கள் தவத்திற்கு மகிழ்ந்தோம்; நாம் சொல்வதைக் கேளுங்கள். பூலோகத்தில் யூதிகாவனம் என்றொரு தலம் உண்டு. அங்கு சென்று தவம் செய்தால் எல்லா சித்தி களும் எய்தலாம்' என்று ஆணை தந்தார். முனிவர்களும் அவ்வாறே இங்கு வந்து தவம் இயற்றினார்கள்.

இறைவன் அவர்களுக்கு அருள் வழங்குதற்காகப் பூதகணம் புடைசூழ, தேவர்கள் தோத்திரிக்க, அரம்பையர் கள் ஆடச் சுயம்பு இலிங்கத்தினின்று தோன்றியருளினார். கண்ட முனிவர்கள் பரவசப்பட்டுப் பாடிப் பரவிப் போற்றினர். பிறகு இறைவன் ஆணையின் வண்ணம் முனிவர்கள் 'இன்ப வீட்டினை அருளுதல் வேண்டும்' என வேண்டிக்கொண்டனர். இறைவனும் அவ்வாறே 'சில நாட்கள் இங்கு தங்கிச் சிவப்பணி செய்யுங்கள்; சிவகதி சேரலாம்' என்றருளி மறைந்தனர். முனிவர்களும் அவ்வாறே சில நாள் தங்கியிருந்து அருச்சித்து ஆனந்த நிலை எய்தினார்கள்.

## 2. இராவணன் வழிபடுதல்

தவத்திற் சிறந்த புலத்தியமாமுனிவர் மனைவியோடு இல்லறம் நடத்தியநாள் பலவாயினும், குழந்தை யில்லாக் குறை அவர்கள் வாழ்க்கையைத் துன்ப வாழ்க்கையாகவே காட்டியது. ஆகையால் கயிலையின் பக்கத்தே தவத்தில் அமர்ந்தார். அத்தவத்திற்கு இரங்கிப் பெருமான் அருள் செய்தபடியே இத்தலத்து வந்து பெருமானை வழிபட்டுக் கொண்டே பதினாயிரம் யாண்டு தவம் செய்தாள் முனி பத்தினி. அவள் அன்புக்கிரங்கிய பெருமான் அம்மை யோடு தோன்றி 'உனக்கு மைந்தனைத் தந்தோம்'

என்றருள் செய்தார். வரம் பெற்ற முனிபத்தினியும் தன் ஆசிரமம் சென்று கணவரிடம் நடந்ததை அறிவித்தாள். நாட்கள் சென்றன. பத்துத் தலைகளைக்கொண்ட குழந்தையும் பிறந்தது. குழந்தை வளர வளர அறிவும் வளர்ந்தது. வேதங்கள் பயின்றது. ஏழிசையெல்லாம் கற்றுக் கொண்டது. அறிவு வலியோடு உடல் வலியும் மிகுந்தது. இராவணன் என்று பெயரிட்டனர் பெற்றோர்.

இராவணன் மூவுலகையும் வென்று பலர்க்கும் துன்பத்தை விளைவித்தனன். பாம்பு தன் விடத்தை உமிழ்ந்ததுபோல மேகநாதன் என்னும் ஒரு மகனையும் பெற்றான். மகனும் தந்தையைப்போல எல்லாரையும் வென்று - இந்திரனையும் வென்று இந்திரசித்து என்னும் பெயரையும் பெற்றான். திக்குவிசயம் செய்து இலங்கைக்குச் செல்வதற்காகப் புட்பக விமானத்திற் புறப்பட்டான். வழியில் விமானம் தடைப்பட்டு நின்றது. இது என்ன ! என் விமானம் தடைப்படுவதா ? இதைச் செய்தார் யார் ? என்று சினந்தான். கண்களில் தீப்பொறி பறந்தன. பல்லைக் கடித்தான். எங்கணும் தேடினான். இங்கு யாரையும் காணோமே என்று தடுமாறினான். கீழே இறங்கி வந்தான். ஆதித்தபுரேசரைக் கண்டான். மயங்கினான். சிவாலயத்தின் மீது நம்முடைய விமானத்தின் நிழல் பட்டதனாலே இத் தடை ஏற்பட்டது என்று வருந்தினான். விநாயக நதியில் நீராடி இறைவனைப் பூசித்தான். துயர் நீங்கப்பெற்றான். விமானம் பறந்து செல்லத் தொடங்கியது. இதுகண்டு வியந்த இந்திரசித்து ‘இந்த அற்புத இலிங்கத்தை இங்கேயே வைத்துவிட்டுப் போவதா ! இலங்கைக்கே கொண்டுபோகிறேன்’ என்று தோண்டினான். களைத்துப் போனான். ஆகாயவாணி “இறைவன் திருவருள் இருந்தா

லன்றி எந்தக் காரியமும் இங்கு நடவாது'' எனப் புத்தி புகட்டியது. கேட்டதும் மயங்கி விழுந்து பிணமானுன்.

இதனை அறிந்த இராவணன் ஓடோடியும் வந்து இறைவன் திருவடியில் வீழ்ந்து வணங்கிச் சிறப்போடு பூசனை செய்து இந்திரசித்தின் இறப்பினை நீக்குமாறு வேண்டிக் கொண்டிக் கொண்டான். இறைவனும் அவ்வாறு அருள் செய்தார். இராவணன் வேண்டிக்கொண்ட படி குற்றம் பொறுத்தான் என்னும் திருமேனி தாங்கிச் சிவலிங்கத் திருமேனியுடன் இன்றும் எழுந்தருளியிருக்கிருர். இறையருள் பெற்ற இராவணனும் இந்திரசித்தோடு இலங்கை ஏகினுன்.

### 3. அநுமன் வழிபடுதல்

இராவணயுத்தத்தில் இராமர், அநுமன் தனது படைகளோடு துணையாகவரச் சென்று இராவணன், கும்பகர்ணன் ஆகியோர்களை யெல்லாம் அழித்தார். சீதா பிராட்டியை மீட்டுக்கொண்டு சேதுவுக்கு வந்தார். புலத்திய முனிவன் மகனுகிய இராவணன் வேதபாரகனுதலாலும், சிவபக்தனுதலாலும் அவனைக்கொன்ற பழி இராமரைப் பற்றியது. பழியைப் போக்கிக்கொள்வதற்குச் சிவலிங்க பூசையே சிறந்தது என்று எண்ணினுர். "அநும! இரண்டு நாழிகைக்குள் ஒரு சிவலிங்கம் கொண்டுவா." எனப் பணித்தார். அதன்படியே அநுமன் வடதிசை நோக்கிச் சென்ருன். நாழிகை கடப்பதைக்கண்ட இராமர் அங்கேயே மணலை இலிங்கமாகக் குவித்துப் பூசித்தார். பிரமகத்தியும் அகன்றது.

இந்தச் சமயத்தில் அனுமனும் இலிங்கத்துடன் ஓடி வந்தான். யான் வருவதற்குள் வேறு இலிங்கமமைத்துப்

பூசித்தது ஏன்? என்று சொல்லி வருந்தினன். ஆயினும் தனது உடல் வலியையே கருதி வாலினல் அந்த இலிங்கத்தைக் கட்டி இழுத்தான். அசைந்தபாடில்லை. ஆனுலும் அநுமனுக்கு வேதனையை உண்டாக்கிவிட்டது. மூச்சொடுங்கிக் கீழே விழுந்தான். கண்ட இராமர் மனம் நொந்தார். அநுமனைத் தூக்கித் தெளிவித்தார்; "நீ செய்தது சிவாபராதம்; அது நீங்கத் தவஞ் செய்க" என்று ஆணையும் அளித்தனர்.

அவ்வாறே தவஞ்செய்த அநுமன்முன் இறைவன் தோன்றி "நீ கன்மநாசபுரம் சென்று பூசித்தால் குற்றம் நீங்கும்" என்று அருளினன். அது கேட்ட அநுமனும் இத்தலத்து வந்து நீராடிப் பூசனையியற்றி வழிபட்டான். இறைவனும் வெளிப்பட்டு "அன்பனே! சராசரங்களெல்லாம் நமது வடிவம் என்பதை ஞானிகளே அறிவர். சாதகரும் அறிதற்காகவே சிவலிங்க உருவிலும் நாம் இருக்கிறோம். அடியார்கள் மரம், கல், மணல் ஆகியவைகளால் இலிங்கம் அமைத்து வழிபடுவார்கள். இவ்வழிபாட்டைச் செய்த சிற்றுயிர்களும் நமது பதவியைப் பெறும். வழிபாட்டை அவமதிப்போர் திருமால் பிரமன் முதலிய தேவர்களாக இருந்தாலும் நரகமடைவர். ஆகவே நீ இங்குவந்து வழிபட்டதால் முன் செய்த குற்றத்தையும் பொறுத்தோம்; உன் தீமை அகன்றது; உன் விருப்பப்படியே சிவபதம் தருகின்றோம்" என்று அருள் செய்து மறைந்தார்.

அருள் பெற்ற அநுமனும் இறைவன் கருணைக்கு வியந்து இத்தலத்து வடகிழக்கு மூலையில் தனது பெயரால் இலிங்கம் நிறுவி அதற்குத் தீர்த்தமும் அமைத்து

வழிபாடாற்றினுன். இத்தலம் திருக்குரக்குக்கா என இப்போழுது வழங்குகிறது.

## 4. விசித்திராங்கன் வழிபடுதல்

சிந்துதேயத்தரசனுகிய சுசரிதன் என்பவனுடைய மகன் இவன். மனைவி பேயர் சுசீலே. இவன் உலகேலாம் ஒரு குடைக்கீழ் அரசாளும் பேரும்பேறு பேற்றிருந்தும் குழந்தை யில்லாக் குறையால் வாட்டமுற்ருன். ஆயினும் தான தருமங்கள் சேய்தலிலும், விரதங்கள் அநுட்டிப்பதிலும் கோஞ்சமும் தவறவில்லே. அப்புண்ணியப் பயன் காரணமாகச் சுசீலே கருவுற்ருள். மாதமும் பத்து நிறைந்தது. இன்று குழந்தை பிறக்கும் என்று ஒவ்வோரு நாளும் எதிர்நோக்கி யிருந்தனர். இப்படியே ஆண்டுகள் ஐந்து சேன்றன. குழவி பிறந்தபாடில்லே. அதற்கு மேலும் ஐந்தாண்டு சேன்றுவிட்டது. 'இது என்ன அற்புதம்' என்றனர் உலகவர். 'நாம் சேய்த புண்ணியப்பயன் இது தானு? கருக்கோண்டது கனவாயிற்ருே?' என்று கவலே யடைந்தனர் பேற்ருேர். மேலும் மேலும் துன்பப்படுவதை விட, சிவ தலயாத்திரை சேய்வதே மேல் என்ற முடிவு கோண்டான் அரசன். அரசாட்சியை அமைச்சர்களிடம் ஒப்புவித்தான். சுசீலேயுடன் புறப்பட்டான்.

காசி முதலாகப் பல தலங்களேத் தரிசித்துக்கோண்டு வந்தான். யாத்திரையால் உடல் வருத்தமுற்ருலும் உள்ளன்பில் சிறிதும் குறைந்தபாடில்லே. திருப்புன்கூர்த் தலத்திலுள்ள ஒரு வேம்படியில் மனேவியுடன் அமர்ந்தான். கவலே வாட்டிற்று. அயர்ந்தான். அப்போழுது "நீவிர் அருகிலுள்ள யூதிகாவனம் சேன்று விநாயக நதியில் நீராடிப் பேருமானே வழிபடுங்கள்; கவலே ஒழியும்" என்று

113195

ஓர் வாக்கு ஆகாயத்தில் எழுந்தது. அவ்வாறே மன்னனும் இங்கு வந்து நீராடி நிறுபூசி நித்திய வழிபாடாற்றினுன்.

வழிபாட்டிற்கு உகந்த பெருமான் கவலைநீங்க அருள் பாலித்தனர். சுசீலையும் மகப்பேற்ருள். தரித்திரன் சிந்தாமணி பெற்றதுபோல் இருவரும் மனமகிழ்ந்தனர். மன்னன் சிற்பநூலின்படியே ஆலயம் அழகுற அமைத்தான்; தலத்தையும் பெரிய நகரமாகவே ஆக்கினுன்; குடிகளைக் குடியேற்றினுன். இவை தலபுராணத்துக்கண்ட வரலாறுகள்.


## 10. மூர்த்திகள்

ஸ்ரீ குற்றம்பொறுத்தநாதர்: ஆண்டவன் ஆன்மாக்கள் புரியும் குற்றங்களைப் பொறுத்து அறக்கருணையும் மறக் கருணையும் காட்டி ஆட்கொள்கின்ருன். 'குற்றமே செயினும் குணமெனக் கருதும் கோள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்' என்று திருப்புன்கூர்த் தேவ தேவனைத் தெய்வத் தமிழாற் பாடினுர் சுந்தரமூர்த்திகள். இத்தலத்து விசேடமூர்த்தியாகி வீற்றிருக்கும் பெருமானும் இத்தகைய திருநாமம் தாங்கி அருள்புரிகின்ருன். அநுமன் செய்த குற்றத்தையும் அதனை அப்பன் பொறுத்து அருள் செய்ததனையும் தல புராணத்தில் அநுமச் சருக்கம் உரைக் கின்றது. இந்திரசித்து செய்த குற்றமும் அதனை இறைவன் பொறுத்தலும் புராணம் புகல்கின்றது. 'துதி செய்ய வரு குற்றம், பொறுத்தான் என்னும் பேரினை என்றும் .புனை' என்று புராணம் பாடுகின்றது.

ஸ்ரீ கோல்வளைநாயகி: 'கூற்ருனைக் கூற்றுதைத்துக் கோல்வளையாள் அவளோடும், என்று சுந்தரர் பாடுகின்ருர்.



நாரை பூசித்தல்



ஸ்ரீ நடராஜர்

மூன்று திருப்பாடல்களில் அம்மையின் திருப்பெயரை அருளு கின்றார். மற்றும் கர்ப்ப ஞானேசுவரர், கர்ப்பஞான பரமேசுவரி, சட்டநாதர் திருவுருவங்களும் அருள் வழங்கும் மூர்த்திகளாக அமைந்துள்ளன. நடராசப்பெருமான் திருவுருவம் மிகப் பழைய தோற்றத்தோடு மிளிர்கின்றது. விரித்த செஞ்சடை. தெய்விகம் பொங்கும் திருவுருவம். சோமாஸ்கந்தத் திருமேனியின் புன்முறுவல் செவ்வி மிக்குப் பொலிகின்றது. சிற்பங்களில் நாரை வழிபடும் காட்சி மகாமண்டபத்து வடபக்கச் சுவரில் விளங்கு கின்றது. இச்சிற்பம் இத்தலத்துக்குரியதோ அன்றி வேறு தலத்துக்குரிய நிகழ்ச்சியோ என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

## 11, இலக்கியம்

இலக்கியத்தாற் சிறக்கும் சிறப்பு எல்லா ஊர்க்கும் வந்து விடாது. அது புண்ணிய வளமும், திருவருள் வளமும் பொருந்தப்பெற்ற பதிகளுக்கே வாய்ப்பதாகும்; இதனால்தான் பாடல்பெற்ற பதிகள் மற்றப்பதிகளிலிருந்து மாண்புயர்ந்து பொலிகின்றன. பொருளாதார நிலையில் சற்றே குறைந்து, ஆலயங்கள் புரப்பாரின்றிச் சிறிது சிதைந்திருப்பினும்கூட அந்தப்பதிகளில் இருக்கும் தெய் விகம் அளவிட அரியதாகும்; அங்கு உள்ள ஒவ்வொரு கல்லிலும் தெய்விகம் பொங்கி வழியும்; மண்ணில் தெய்வ மணக்கும். ஆலயத்தின் அணுக்கள் தோறும் ஆண்ட வனின் கருணை தாண்டவமாடும். இத்தகைய தெய்வீக இலக்கியச் சிறப்பு இத்திருக்கருப்பறியலூர்க்கு இயல்பாக அமைந்து விட்டிருக்கிறது. சமயாசாரியர் இருவர் திருப் பாடல்கள் இத்தலத்தின் பேரருள் இலக்கியங்களாகப் பொலி கின்றன; பயில்வோரை வாழ்விக்கின்றன. திருஞான

சம்பந்தப் பெருமானின் ‘சுற்றமோடு பற்றவை’ என்று தொடங்கும் இந்தளப்பண் ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ‘சிம்மாந்து’ என்று தொடங்கும் நட்டபாடைப் பண் ஒன்றும் அவையாகும். இத்தலத்தை அடுத்து ஈசான மூலையில் இலங்குகின்ற திருக்குரக்குக்கா என்ற திருக்கோயிற் பிரானைத் திருநாவுக்கரசுப் பெருமான் பாடிய பண் ஒன்றும் உள்ளது. திருக்குறுந்தொகையில் ‘மரக்கோக்காம் என வாய்விட்டலறி’ எனத் தொடங்கும் திருப்பதிகமே இது. இவைதவிர இத்தலத்துக்கு ஓர் புராணம் ஒன்றும் இனிய செந்தமிழ்க் கவிகளால் இயன்றுள்ளது.

அதனை இயற்றியவர் மருதூர் அம்பலவாணர் என்ற புலவர் ஆவர். அவர் காலம் இற்றைக்குச் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் ஆகும். இவர், திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்தில் 10-ஆவது குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவருள் பெற்றவராவர். இச்செய்தி இப்புராணத்து ஞானுசாரியர் துதியாலும், சிறப்புப்பாயிரத்தாலும் அறியப்பெறுகின்றது. ‘தேசமரும் சிவ்ஞான தேசிக பூரண மதிமையச் சிந்தை செய்வாம், என்றும் ‘சோறபாவின் செயம் படைத்த மருதூர் அம்பலவாண சுமுகத்தோனே’ என்றும் அப்பகுதிகள் அமைந்துள்ளன. 298 பாடல்கள். ஒவ்வொன்றும் இனிய இலக்கியங்களாகிப் பக்தியைப் பக்தர்க்கு ஊட்டி மிளிர்கின்றன.

## 12. நிர்வாகம்

தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. ஆதீனத்தில் 25-வது மகாசந்நிதானமாக விளங்கு

கின்ற ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் இப்போழுது நிர்வகிக்கப்பெற்று வருகிறது. இவ்வாலயத்திற்கு நன்செய் ஏ. 79 செ. 46 புன்செய் ஏ. 57 செ. 43 நிலம் இருக்கிறது.

## 13. திருப்பணி

இதில் மலைக்கோயில், இராஜகோபுரம் முதலியன அஸ்திவாரத்திலிருந்தே பிரித்துப் புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டன. மலையிலுள்ள சுதை விக்கிரகமும் புதுப்பிக்கப்பட்டது. மற்றும் சுவாமி அம்மன் கருப்பக்கிரக விமானம் முதலியனவும் புதுப்பித்து வர்ணம் வைக்கப் பட்டுள்ளன. மற்றும் கீழப்பிரகாரத் தளவரிசை முதலியன வும் போடப்பட்டன. இவ்வாறு பல ஆயிர ரூபாய் செலவில் நான்கு ஆண்டுகளாகத் திருப்பணி செய்யப்பெற்று 22—3—53 ஞாயிற்றுக்கிழமை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக நினைவு மலராகத் தலபுராணச் சுருக்கம் நூல்வடிவில் அச்சிட்டு அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

## 14. கல்வெட்டுக்களும் செய்திகளும்

இத்தலத்துக்குக் கல்வேட்டுக்கள் பன்னிரண்டு உள்ளன. இவற்றால் சில செய்திகளை நாம் உறுதிப்படுத்த முடிகிறது.* அந்த அளவுக்கு இவை உறுதுணை புரிதலைக் காணலாம். . அரசாங்கத்துப் பழமைக் காவல் துறை இவற்றை 1927-ல் படி எடுத்து வைத்திருக்கிறது.*

---

*see the Annul reports on South Indian ephigraphy for the year 1927. 140—158

மூன்றும் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் 13-ம் ஆண்டு 280-ம் நாளிலும், 14-ம் ஆண்டு 35ம் நாளிலும் எழுந்த கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. கோனேரின்மை கோண்டானின் 7-ம் ஆண்டு 73-ம் நாளிலும், 10-ம் ஆண்டு 334-ம் நாளிலும் தோன்றிய கல்வெட்டுகளும் இலங்குகின்றன. திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் கல்வெட்டு மூன்று, 20-ஆண்டுகளில் போறிக்கப்பெற்றவை உள்ளன. இவை தமிழ் மன்னர்களோடு தோடர்பு உள்ளவை. விஜயநகர அரசர்களில் பிரதாபகிருஷ்ண தேவராயரின் சகம் 1499-ல் போறிக்கப்பெற்ற கல்வெட்டும் உண்டு. அரசர் பேயர் இன்றிச் சிலவும் அமைந்துள்ளன.

இவற்றிற் குறிப்பிடத்தகுந்த சில சேய்திகள்: III-ம் குலோத்துங்க சோழன் காலத்தில் இத்தலம் 'தனிநாயகச் சதுர்வேதி மங்கலம்' என்று பேயர் பேற்றது என்றும், இப்பேயரே சிதைந்து தலைஞாயிறு என வழங்குகிறதேன்றும் கல்வெட்டுப் புலவர் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் கருதுவர். அருக்கனுல் அருச்சிக்கப் பேற்றதாதலின் 'தலைஞாயிறு' எனப்பேயர் பேற்றதேன்றலே போருத்தமுடையதாகும். நமது முன்னோர் கோள்கைக்கும் இதுவே முரணின்றி முடியும். 'அகரம் தனிநாயகச் சதுர்வேதிமங்கம்' என்று கல்வெட்டுக்கள் இவ்வூரைக் குறிப்பிடுகின்றன. அகரம் என்பது அந்தணர் வாழ்கின்ற இடமாகும். இப்படிக் கல்வெட்டுக்கள் கூறுவதற்கேற்ப இத்தலத்துப் பதிகமும் கூறுகின்றமை காண இஃது உண்மையாவதைத் தேளியலாம். பார்வதி பாகர் என்று பேருமான் குறிக்கப் பேறுகின்றூர். ஊர்ச்சபை உறுப்பினராதற்குரிய சட்டதிட்டங்கள் இக்கோயில் வடபுறச் சுவரில் உள்ள கல்வெட்டிற் காணப்படுகின்றன. இது

அக்காலத் தமிழ்மக்கள் எவ்வாறு அர்சியல் வாழ்வில் நேர்மையைக் கையாண்டு சீர்மை பெற்றிருந்தனர் என்பதை விளக்க உறுதுணை புரிவதாகும்.


## 15. கோயில் அமைப்புக்களும் மன்னர்களும்

இக்கோயிலின் தூபியை சோழக்குலத்தான் மங்களாதி ராசர் என்பார் அமைத்தனர். III-ம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் இவ்வறச் செயல் நிகழ்ந்தது. வில்ல வரையர் என்பார் இக்கோயில் பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளப்பண்ணுவித்தார். திரிபுவனச் சக்கிரவர்த்திகள் இராசராச தேவரின் ஆட்சிக்காலத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையார்க்குக் காலை சந்திக்கும், உச்சியம்போதுக்கும் திருவமுது படைத்தற்கு நிவந்தங்கள் விடப்பட்டன. இக்கோயிலைத் தொழவரும் அடியார்க்கும், திருவாதிரையில் ஆனந்த நடராச மூர்த்தியை எழுந்தருளப் பண்ணுதற்கு மாகவும் நிவந்தங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. மகா மண்டபம் எழுப்பப்பெற்றது விக்கிரமசோழ வேளார் என்ற விழுமிய சிவத்தொண்டரால். இவ்வண்ணம் கல்வெட்டுக் களினின்று இக்கோயில் அமைப்புக்குக் காரணராக இருந்த மன்னர்களைப்பற்றி அறியலாம். இவர்களது சிவபக்தியின் முகிழ்ச்சியாகவே இன்றைய சிவாலயம் நின்று நிலவுகிறது.

## 16. நின்று நிலவும் நீள்தலம்

பாடல்பெற்ற இப்பழம்பதி திருத்தருமையாதீனத்தின் ஆட்சிக்கு உட்பட்டு அரிய தோற்றத்தோடு விளங்கி வருகிறது. இனிய இயற்கைச் சூழ்நிலையில் இறைவன் திருக்கோயில் இன்றும் அடியார்களுக்கு அரிய திருவருட் காட்சி வழங்கித் திகழ்கின்றது. குற்றம்பொறுத்த

ஈசுவரரின் பேரருளும், கோல்வளை நாயகியின் பெருங் கருணையுமே இத்தலத்தின் எழுச்சிக்குக் காரணங் களாம். தெய்விகம் சான்ற இத்திருத்தலம் உலகம் உள்ளளவும் நின்று நிலவி மனிதர் செய்யும் குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்கி மாண்பார் அருள் வழங்கும் என்பதற்கு ஐயமும் உண்டோ?



உ

குருபாதம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

திருவிராகம். பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சுற்றமோடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களோடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே. 1

1. சுற்றமோடு பற்று அவை - (துணையும்) சுற்றமும் பற்றும் ஆகியவற்றை. இவ்வாறு கருமூலத்தைப் பறிப்ப தால் கருப்பறியலூர் என்றுயிற்று. கலந்தவர் கருப்பறியல் என ஆசிரியரே இப்பதிக முடிவில் ஊர்ப்பெயர்ப் பொருளை உணர்த்தியது உணர்க. துயக்கு - அறிவு வேறுபடல். சிவபிரானையே அறியும் அறிவு வேறுபடாதவாறு சுற்றம் முதலியவற்றை அறுத்து என்றபடி. மற்று அசை. அடியார் களாகிய அவரை என்க. வானுலகம் - வீடுலகு. கற்றவன் - இயல்பாகவே உணர்ந்த சிவன்.

வண்டணைசெய் கொன்றையது வார்சடைகண் மேலே
கொண்டணைசெய் கோலமது கோளரவி னோடும்
விண்டணைசெய் மும்மதிலும் வீழ்தரவோ ரம்பால்
கண்டவ னிருப்பது கருப்பறிய லூரே. 2

2. வண்டு அணைசெய் - வண்டுகள் அணைதலைச் செய்கின்ற. கோலம் - திருக்கோலம், அழகு. கோள் - துன்பம், வலிமையுமாம். விண்டு - (இடம்) விண்டு, நீங்கி விள்ளல் உற்று.

வேதமொடு வேதியர்கள் வேள்விமுத லாகப்
போதினொடு போதுமலர் கொண்டுபுனை கின்ற
நாதனென நள்ளிருண்மு னாடுகுழை தாழும்
காதவ னிருப்பது கருப்பறிய லூரே. 3

3. முதலா - முதலிய பல நற்செயல்களிலும். போதினொடு - (காலம் பெறப்) பொழுதோடு. போது - மலரும் பருவத்தது. மலர் - பூ. குழைதாழும் காதவன் - 'குழைக்காதவன்' என்னும் திருப்பெயரைக் குறித்தது.

மடம்படு மலைக்கிறைவன் மங்கையொரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்றமறை யோனைத்
தொடர்ந்தணவு காலனுயிர் காலவொரு காலால்
கடந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. 4

4. மடம் - அழகு. துறவிகள் உறையும் இடம் பல உடையதால் மடம் படு மலை என்று இமயத்தினைக் குறித்தல் பொருந்தும். இறைவன் - அரசன். மறையோன் - மார்க்கண்டேய முனிவர். அணவு - கிட்டிய. காலன் - யமன். கால - கக்க. கடந்தவன் - கடக்கவுதைத்தவன்.

ஒருத்தியுமை யோடுமொரு பாகமது வாய
நிருத்தனவ னீதியவ னித்தனெறி யாய
விருத்தனவன் வேதமென அங்கமவை யோதும்
கருத்தவ னிருப்பது கருப்பறிய லூரே. 5

5. நிருத்தன் - கூத்தன். நித்தன் - அழியாதவன். விருத்தன் - முதியோன். வேதம் அங்கம் - நான்மறையும் ஆறங்கமும். கருத்தவன் - தலைவன். கருத்துள் இருப் பவன். 6. 83. 5.

விண்ணவர்கள் வெற்பரசு பெற்றமகண் மெய்த்தேன்
பண்ணமரு மென்மொழியி னுளையணை விப்பான்
எண்ணிவரு காமனுடல் வேவவெரி காலும்
கண்ணவ னிருப்பது கருப்பறிய லூரே. 6

6. விண்ணவர்களுக்கு, வெற்புக்கு அரசு எனக் கூட்டுக. எரிகாலும் கண் - நெருப்பைக் கக்கும் கண். இது பெருமானது வெகுண்ட நிலையைக் குறித்தது. அணைதல் அம்பிகையது. அணைவித்தல் ஆண்டவனது. தேன்மொழி, மென்மொழி என்றவாறு.

ஆதியடி யைப்பணிய அப்பொடு மலர்சேர்
சோதியொளி நற்புகை வளர்க்குவடு புக்குத்
தீதுசெய வந்தணையு மந்தக னரங்கக்
காதின னிருப்பது கருப்பறிய லூரே. 7

7. அப்பு - சலம். சோதி ஒளி - தூபம். நற்புகை - தூமம். வளர்க் குவடு புக்கு - வளர்தலையுடைய கருப் பறியலூர்க் கோயில் கட்டுமலை மேலுள்ளதாதலின் அதனுள் புகுந்து. அரங்க - புடை பெயர. அழியவுமாம். காதினன் - ஈண்டு உதைத்தவன் என்னும் பொருட்டு.

வாய்ந்தபுகழ் விண்ணவரு மண்ணவரு மஞ்சப்
பாய்ந்தமர்செ யுந்தொழிலி லங்கைநகர் வேந்தற்

கேய்ந்தபுய மத்தனையு மிற்றுவிழ மேனாள்
காய்ந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. 8

8. வாய்ந்த புகழை உடைய விண்ணவர் என்றும் மாறிக் கூட்டிப் புகழ் வாய்ந்த என்றும் கோள்ளலாம். இற்றுவிழ - ஒடிந்து விழ. காய்ந்தவன் - சினந்தவன். ஏய்ந்த - போருந்திய.

பரந்தது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்தோர்சடை மேன்மிசை யுகந்தவளை வைத்து
நிரந்தர நிரந்திருவர் நேடியறி யாமல்
கரந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. 9

9. நிரந்து - வரிசையாக. பரந்து - பரவி. சடை மேல் மிசை - சடையினது மேலிடத்தில். நிரந்தரம் - எப்போதும். நேடி - தேடி. கரந்தவன் - ஒளித்தவன்.

அற்றமறை யாவமண ராதமிலி புத்தர்
சோற்றமறி யாதவர்கள் சோன்னசோலை விட்டுக்
குற்றமறி யாதபேரு மான்கோகுடிக் கோயில்
கற்றேன விருப்பது கருப்பறிய லூரே. 10

10. அற்றம் மறையா அமணர் - மறைக்கவேண்டிய உறுப்புக்களை மறைக்காத சமணர். 'அற்றம் மறைப்பது முன்பணியே' என்றதுணர்க. சோற்றம் - சோல்லும் சோற்கள். சோல்+து+அம். கோகுடி - ஒரு வகை முல்லை. குற்றமறியாத பேருமான்-இத்தலத்துப் பேருமான் திருப்பேயர். கற்றேன - நிலையாக. கல்+து - கற்று. கல்லைப்போன்று உறுதியானது.

நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியன் மேயகட வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெளி தாமே. 11

11. கடவுள்ளை - கடவுளை (விரித்தல் விகாரம்). பலம் - பலன். வலந்தருதல் - உயிர்க்கு வன்மையை அளித்தல். திருக்கோயிலை வலம் வருதலுமாம். வினை வாடல் - கருப்பறிதல் 'கலந்தவர்கருப்பறியல்' என்ற தொடர் இத் திருத்தலத்தின் பெயர்ப்பொருளைக் குறித்தது. பறியல்மேய - பறியலில் மேவிய.

திருச்சிற்றம்பலம்.

---

குறிப்புரை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பிரின்ஸ்பால், முதுபெரும் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் எழுதியது.

உ

குருபாதம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்
வைத்துகந்து திறம்பா வண்ணம்
கைம்மாவி னுரிவைபோர்த் துமைவெருவக்
கண்டானைக் கருப்ப றியலூர்க்
கோய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
மயிலாடுங் கோகுடிக் கோயில்
எம்மானை மனத்தினுல் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 1

1. சிம்மாந்து - செம்மாந்து; கை மா - ஆனை. ஆனையின் உரி போர்த்தது வழுவூர் வீரட்டத்து வரலாறு. கோய் மா - மரம்; கோகுடிக்கோயில் - இது கோயிற் பெயர். இவ்வாறே ‘குற்றமறியாத பெருமான் கோகுடிக் கோயில்’ என்றனர் சம்பந்தமூர்த்திகளும்.

நீற்றுரு மேனியராய் நினைவார்தம்
உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றுனைத் தீயானைக் கதிரானை
மதியானைக் கருப்ப றியலூர்க்

கூற்றனைக் கூற்றுதைத்துக் கோல்வளையா
ளவளோடுங் கோகுடிக் கோயில்
ஏற்றனை மனத்தினுல் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 2

2. கோல்வளையாள் - தலத்து இறைவியின் திருநாமம்; இறைவன் எல்லாமாய் உள்ளான் என்ற உண்மை உணர்த்தப் பெற்றது. ஏற்றன் - விடை ஏறு உடையான். 'ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்' என்றனர் திருநாவுக்கரசு மூர்த்திகளும்; அன்றி அடியவர்களைத் தன்பால் கருணை யினுல் ஏற்றுக்கொண்டவன் எனலும் ஆம்.

முட்டாமே நாடோறும் நீர்மூழ்கிப்
பூப்பறித்து மூன்று போதும்
கட்டார்ந்த இண்டைகொண் டடிசேர்த்து
மந்தணர்தங் கருப்ப றியலூர்க்
கோட்டாட்டுப் பாட்டாகி நின்றனைக்
குழகனைக் கோகுடிக் கோயில்
எட்டான மூர்த்தியை நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 3

3. முட்டாமே - தவருமல்; மூன்று போது - காலை, நண்பகல், மாலை; 'முப்போதும் திருமேனி தீண்டுவார்' - என்றருளியது ஓர்க. 'அகரம் தனிநாயகச் சதுர்வேதி மங்கலம்' என்று இவ்வூரைக் கல்வெட்டுக்கள் குறிப்ப தனையும், 'அந்தணர்தம் கருப்பறியலூர்' என்று சுவாமிகள் அருளுதலையும் ஒப்பிட்டு மகிழ்க. கோட்டு + ஆட்டு + பாட்டு - ஆண்டவன் திருக்கூத்தின்கண் ஒருங்கு நிகழ்வன. குழகன் - இளையோன்; எட்டான மூர்த்தி - அட்ட வீரட்டங்

களில் உறையும் இறையோன்; அன்றி எண் குணங்கள் வடிவாய பெருமான் எனலும் ஆம்.

விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி
வினைபோக வேலி தோறும்
கருந்தாள வாழைமேற் செங்கனிகள்
தேன்சொரியுங் கருப்ப றியலூர்க்
குருந்தாய முள்ளெயிற்றுக் கொல்வளையா
ளவளோடுங் கொகுடிக் கோயில்
இருந்தானை மனத்தினால் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 4

4. விருந்து - புதுமை; தாள - தாளை உடைய; குருந்து - குருத்து. வாழைமேற் கனிகள் தேன் சொரியும் என்றது வளம் கூறிற்று.

பொடியேறு திருமேனிப் பெருமானைப்
பொங்கரவக் கச்சை யானைக்
கடிநாறு பூம்பொய்கைக் கயல்வாளை
குதிகொள்ளுங் கருப்ப றியலூர்க்
கொடியேறி வண்டினமும் தண்டேனும்
பண்செய்யுங் கொகுடிக் கோயில்
அடியேறு கழலானை நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 5

5. பொடி - திருநீறு; கச்சை - ஆடை; பண் செய்யும்- பண் இசைக்கும்; அடி ஏறு கழலான் - திருவடியிலே ஏறிய கழல் உடையான்.

போய்யாத வாய்மையாற் போடிப்பூசிப்
போற்றிசைத்துப் பூசை செய்து
கையினு லெரியோம்பி மறைவளர்க்கு
மந்தணர்தங் கருப்ப றியலூர்க்
கோய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூ வ
மயிலாலுங் கோகுடிக் கோயில்
ஐயனையேன் மனத்தினுல் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 6

6. போய்யாத வாய்மை - போய்யை நேஞ்சாலும் நினையாத வாயின் தன்மை; மறை - வேதநேறி. ஐயன் - அழகியோன், தலைவன், வியப்புக்குரியோன்.

சேடிகோணே யுள்ளனவும் தீவினையும்
தீர்ந்தோழியச் சிந்தை செய்ம்மின்
கடிகோள்பூந் தடமண்டிக் கருமேதி
கண்படுக்குங் கருப்பறிய லூர்க்
கோடிகள்பூ நுண்ணிடையாள் கோல்வளையா
ளவளோடுங் கோகுடிக் கோயில்
அடிகளையேன் மனத்தினுல் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 7

7. சேடிகோள் - கிளைத்தலைக்கோண்ட. சிந்தை செய்மின் என்றது உலகவரை நோக்கி. மண்டி - சேறிந்து. மேதி - எருமை. கண்படுத்தல் - உறங்கல். அடிகள் - சுவாமிகள். அன்றித் திருவடிகள் எனலும் ஆம்.

பறையாத வல்வினைகள் பறைந்தொழியப்
பண்ணுளும் பாடி யாடிக்
கறையார்ந்த கண்டத்த னெண்டோளன்
முக்கண்ணன் கருப்ப றியலூர்க்
குறையாத மறைநாவர் குற்றேவ
லொழியாத கோகுடிக் கோயில்
உறைவானை மனத்தினால் நினைந்தபோ
தவர் நமக் கினிய வாறே. 8

8. பறைதல் - கெடுதல்; 'பார்வை யாத்த பறைதாள் விளவின்' என்பது பெரும்பாணாற்றுப்படை (95). கறை - நீலகண்டம். 'கறைமிடறு அணியலும் அணிந்தன்று,' - என்பது புறம். உறைவான் - எழுந்தருள்வான்.

சங்கேந்து கையானுந் தாமரையின்
மேலானுந் தன்மை காணக்
கங்கார்ந்த வார்சடைக ளுடையானை
விடையானைக் கருப்ப றியலூர்க்
கொங்கார்ந்த பொழிற்சோலை சூழ்கனிகள்
பலவுதிர்க்குங் கோகுடிக் கோயில்
எங்கோனை மனத்தினால் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 9

9. கையான் - திருமால்; மேலான் - பிரமன். கங்கு ஆர்ந்த - பக்கம் நிறைந்த. அன்றிக் கங்கையார்ந்த என்பதன் தொகுத்தல் விகாரமும் ஆம்; வார் - நீண்ட; கொங்கு - தேன். கோன் - தலைவன்.

பண்டாழி னிசைமுரலப் பன்னுளும்
பாவித்துப் பாடி யாடிக்
கண்டார்தங் கண்குளிருங் களிக்கமுகம்
பூஞ்சோலைக் கருப்ப றியலூர்க்
குண்டாடுஞ் சமணரும் சாக்கியரும்
புறங்கூறுங் கோகுடிக் கோயில்
எண்டோளேம் பேருமானை நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. 10

10. பண் + தாழ் + இன் + இசை - எனப்பிரிக்க. களிப்போடு கூடிய கமுகம் என்க. குண்டு ஆடும் - குண்டுத் தன்மையை உடையராய் அறிவின்றி ஆடும். (சமணர்.) புறங்கூறுதல் - இகழ்ந்து 'போய்த்து உயிர் வாழ்தல்'. 'எண்டோள் வீசிநின்று ஆடும்பிரான்' - என்றனர் திருநாவுக்கரசு சுவாமிகளும்.

கலைமலிந்த தேன்புலவர் கற்றோர்தம்
இடர்தீர்க்குங் கருப்ப றியலூர்க்
குலைமலிந்த கோட்டேங்கு மட்டோழுகும்
பூஞ்சோலைக் கோகுடிக் கோயில்
இலைமலிந்த மழுவானை மனத்தினு
லன்புசெய் தின்ப மெய்தி
மலைமலிந்த தோளூரன் வனப்பகையப்
பன்னுரைத்த வண்ட மிழ்களே. 11

11. கலை - கலைஞானம்; தேன் - அழகிய; அல்லது தேன்மோழியாகிய தமிழ் எனலும் ஆம்; இடர் - மூவகைத் துன்பங்கள். (குறள் - கடவுள் - பரிமேல்) மட்டு - தேன்;

இலே - இலேவடிவாகி. ஊரன் - நாவலூரன்; ‘ அவனே அன்புசெய்தால் இன்பம் கிடைக்கும் ’ என்று அறிவுறுத்திய வாறு. ஒவ்வொரு பாடலிலும் ஒருமை பன்மை வழு வந்ததே எனின், ‘ ஒருமை பன்மை கடந்து நின்ற இறைவ னுக்கு யாங்ஙன மொழிந்தால் என் ’ என்று மறுக்க.

திருச்சிற்றம்பலம்.

113195

---

குறிப்புரை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு, சொ. சிங்காரவேலன் அவர்கள் எழுதியது.

# தருமபுர ஆதீன வெளியீடுகள் :—

| எண் | புத்தகம் | விலை<br>ரூ.அ.பை. | தபாற்செலவு<br>ரூ.அ.பை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்) | 3—8—0 | 1—5—0 |
| 2. | இரண்டாந்திருமுறை (காலிகோ) | 5—0—0 | 1—8—0 |
| 3. | மூன்ருந்திருமுறை (காலிகோ) | 5-12—0 | 1—9—0 |
| 4. | சமயபோதச் சொற்பொழிவுகள் | 1—0—0 | 0-13—0 |
| 5. | பரமாணு புராணம் | 1—4—0 | 0—9—0 |
| 6. | நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம் | 1—8—0 | 0—9—0 |
| 7. | திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ) | 13—8—0 | 2—4—0 |
| 8. | காமத்துப்பால் ,, | 6—0—0 | 1—8—0 |
| 9. | திருவாசகம் ,, | 2—0—0 | 0-14—0 |
| 10. | நால்வர் நான்மணிமாலை | 0—4—0 | 0—4—0 |

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

கிடைக்குமிடங்கள் :-

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. தருமபுர ஆதீ மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயம்,
   41, உஸ்ம ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

ஆதீன சப்புலவர், இசையரசு
திரு. M. M. தண்ட ணி தேசிகர் அவர்கள் பாடிய,

பாராயணத் தி றைப் பாடல்கள்

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40—10—0 |
| தபால், பாக்கிங் செலவு | ரூ. | 6— 8—0 |

கிடைக்குமிடங்கள் :-

1. காஷியர், ஸ்ரீ சட்டைநாத சு ி தேவஸ்தானம்,
   சீகாழி, தஞ்சாவூர் ஜில்லா.
2. தருமபுர ஆதீன மடாலய தேவா பிரசார நிலயம்,
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநக , சென்னை-17.